Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


# Expressions of Nostalgic Feelings of the Coastal Beloved in *Kurunthokai*

**A. Mani,** Reg. No.: 18211284021006, Research Scholor, Tamil Research Centre,
St.Xavier's College, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
**Dr. S. Ravi Jesuraj,** Assistant Professor of Tamil, Tamil Research Centre,
St.Xavier's College, Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0006-3575-5325**
**DOI:**

## Abstract

*The article states the nostalgic feelings and their expressions found in the Neithal songs (Coastal) of "Kurunthogai." Four Kalavu (Secret Love) songs are taken for study and they highlight the expressions of nostalgic feelings of the beloved (Thalaivi) that can be learned from the songs. The sad expressions of the ladylove who is sad by the hero's separation has been mentioned in the poems. Among them, the part called "Vemmaik Kanneer Sindhum Nilai" describes how the heroine worries for the hero and sheds tears for his safety. It also explains how the heroine longs for the departed hero and asks her friend about the sickness of lust. She tells the maid (Thozhi) that she wants to give up her life. She is unable to bear the separation from his thoughts. The section titled "Paruvam Kandhu Irangum Nila" mentions that the hero did not return even at the Karkalam (Rainy Season). and shows how the bellowed mourns for it. The section on the separation of the hero and the nostalgic situation of the beloved is shown by the poets in the above mentioned four songs. In the concluding section, it is shown that the expressions of the beloved are very sensitive to the departure of the hero. She has a strong love for him, and the hero thinking the bellowed believes that her pure love will help her to live a happy married life. Nevertheless, the article mentions the reason for the hero's separation from the textual references.*

**Keywords:** *Kurunthogai*, Neithal, Beloved (Thalaivi), Hero (Thalaivan), Maid (Thozhi).

## References

[1] Ilampooran, (Ed.). *Tholkappiyam Bhattathikaram*. Tirunelveli South Indian Saiva Siddhanta Book Publishing Association, Ltd., Chennai -1, March 1982.
[2] Yesudasan, P.S. *Thirukkuralil Kalavum Karppum*. Manivasagar Publishing House, Chennai - 600 108, 2015.
[3] Saminathaiyaravars, U.V. (Ed.). *Kurunthokai*. Kabir Printing House, Chennai, 1947.
[4] Somasundharanar, P.V. (Ed.). *Kurunthokai*. Tirunelveli South Indian Saiva Siddhanta Book Publishing Association, Ltd., Chennai -18, 2007.
[5] Nagarasan, V. (Text.). *Kurunthogai* (Source and Text), Book – 1, New Century Book House (P) Ltd., Chennai – 600 098, 2014.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

# குறுந்தொகை நெய்தல் தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகள்

**ஆ. மணி**, பதிவெண்: 18211284021006, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
**முனைவர் சு. ரவி ஜேசுராஜ்,** உதவிப்பேராசிரியர், தமிழ் ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0006-3575-5325
**DOI:**

**ஆய்வுச்சுருக்கம்**

*குறுந்தொகை நெய்தல் தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகள் என்பது ஆய்வுக்கட்டுரைத் தலைப்பு. இவ்வாய்வுக் கட்டுரையில் முதலாவதாக முன்னுரைப் பகுதி அமைகிறது. இப்பகுதியில் குறுந்தொகைக்கண் இடம்பெறும் நெய்தல் பாடல்களுள் தலைவி தோழியிடம் கூறுவனவாக உள்ள நான்கு களவுப் பாடல்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன என்பதும் அப்பாடல்களிலிருந்து அறியலாகும் தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகளை எடுத்துரைப்பது இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது என்பதும் கூறப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து தலைவனது பிரிவினால் துயருற்ற தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகளின் வகைகள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றுள் வெம்மைக் கண்ணீர் சிந்தும் நிலை என்னும் பகுதி களவில் தலைவன் தன்னைப் பிரிவான் என்பதனை அறிந்த தலைவி கலங்கித் துயருற்றுக் கண்ணிமைகள் கருகும் அளவிற்கு வெம்மைக் கண்ணீர் வடித்ததனையும் தலைவன் அக்கண்ணீரைத் துடைத்து ஆற்றுவித்ததனையும் அத்தகைய காதலன்பு கொண்ட தலைவன் பின்னர்த் தன்னைப் பிரிந்ததால் துயர் ஆற்றாதவளாகித் தனது நெஞ்சு மிகவும் வருந்துகிறது என்று தோழியிடம் கூறுவதனையும் எடுத்துரைக்கிறது. கண்கள் துயிலாத நிலை என்னும் பகுதி பிரிந்த தலைவனது வருகையை எதிர்நோக்கிக் கண் துஞ்சாது வருந்திய தலைவிகாமநோய் என்பது அத்தகையதோ?எனத் தோழியிடம் வினவுவதை விளக்குகிறது. உயிர் துறக்கும் நிலை என்னும் பகுதி தலைவன் பிரிந்தவுடன் அவனது பிரிவை ஆற்றாமல் நீங்காத காம உணர்வுடன் தலைவி தனது உயிரைத் துறக்க விரும்புவதைக் கூறுகிறது. பருவம் கண்டு இரங்கும் நிலை என்னும் பகுதி கார்ப்பருவம் தொடங்குவதற்கு முன்னர்த் திரும்பி வருவதாகத் தலைவியிடம் கூறிச் சென்ற தலைவன் கார்காலத்தில் மழை பெய்யும்போதும் மீண்டு வராததால் அவள் மிக வருந்தி இரங்கியதைக் குறிப்பிடுகிறது. தலைவனது பிரிவுக்கான காரணம் என்னும் பகுதியில் மேற்குறிப்பிட்ட நான்கு பாடல்களுக்குரிய உரை விளக்கங்களின் மூலம் தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்தான் என்பது கூறப்படுகிறது. முடிவுரைப்பகுதியில் நெய்தல் தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகளின் மூலம் பிரிந்த தலைவனைத் தலைவி மறவாது அவன்மீது உறுதியான தூய காதலன்பு கொள்கிறாள் என்பதும் அத்தூய காதலன்பு*

*தலைவனோடு சேர்ந்து சிறந்த இல்லற வாழ்வு வாழத் துணைபுரியும் என்று தலைவி நம்புகிறாள் என்பதும் கூறப்படுகின்றன. மேலும், தலைவனது பிரிவுக்கான காரணத்தைப் பாடல்கள் கூறாவிடினும் உரை விளக்கங்கள் கூறுகின்றன என்பது உரைக்கப்படுகிறது.*

**திறவுச்சொற்கள்:** *குறுந்தொகை*, நெய்தல், தலைவி, தலைவன், தோழி.

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் என்று இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகை என்பது அகநூலாகும். இதனுள் ஐவகைத் திணைகள் குறித்த பாடல்கள் இடம்பெறுகின்றன. குறுந்தொகையில் உள்ள முதல் இருநூறு பாடல்களில் முப்பது பாடல்கள் நெய்தல் திணையைச் சார்ந்தவை.அவற்றுள் தலைவி தோழியிடம் கூறுவனவாகப் பதினான்கு பாடல்கள் அமைந்துள்ளன. அவை களவுப் பாடல்கள். அக்களவுப்பாடல்களுள் நான்கு பாடல்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. அப்பாடல்கள் மூலம் புலப்படும் தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகளை எடுத்துரைப்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**இரங்கல் உணர்வு வெளிப்பாடுகள்**

ஐந்திணை நிலப்பகுப்புக்களுள் ஒன்றான நெய்தல் நிலத்தைக் கடலும் கடல் சார்ந்த இடமும் கொண்ட பகுதியாக முன்னோர் வகுத்தனர். இந்நிலத்தில் வாழ்கின்ற மக்களின் உரிப்பொருள் இரங்கலும் இரங்கல் நிமித்தமும் ஆகும்.நெய்தல் நிலத் தலைவனும் தலைவியும் களவு வகைகளுள் ஒன்றான இயற்கைப் புணர்ச்சிக்கு உட்படுகின்றனர்.பின்னர் இருவரும் ஆழ்ந்த காதல் உணர்வுடன் உள்ளம் ஒன்றி வாழ்ந்து வருகின்றனர்.இச்சூழலில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்கிறான்.நீண்ட நாட்களாகத் தலைவனைக் காணாது தலைவி பிரிவாற்றாமல் துயருறுகிறாள். இப்பிரிவாற்றாமையால் அவள் இரங்கிய மனநிலைக்கு உள்ளாகிறாள்.அதன் விளைவாக அவளிடமிருந்து பல இரங்கல் உணர்வுகள் வெளிப்படுகின்றன.

**1) வெம்மைக் கண்ணீர் சிந்தும் நிலை,**

**2) கண்கள் துயிலாத நிலை,**

**3) உயிர் துறக்கும் நிலை,**

**4) பருவம் கண்டு இரங்கும் நிலை**

என்பன தலைவியின் இரங்கல் உணர்வின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன. அவை இப்பகுதியில் விளக்கப்படுகின்றன.

**வெம்மைக் கண்ணீர் சிந்தும் நிலை**

தலைவனது பிரிவைத் தாங்க முடியாமல் கலங்கித் துயருறும் தலைவி தனது நெஞ்சு மிகவும் வருந்துகின்றது எனத் தோழியிடம் கூறுகிறாள். இயற்கைப் புணர்ச்சியின்போது

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

தலைவன் தலைவியிடம் "**நின்னைப் பிரியேன்"** என்று கூற, பிரிவு என்ற ஒன்று உண்டு என்பதனை நினைத்துக் கலங்கிய தலைவி தனது கண்களின் இமைகள் கருகும் அளவுக்கு வெம்மைக் கண்ணீர் வடித்தாள். அக்கண்ணீரைத் தலைவன் தனது கையால் துடைத்துத் தலைவியுடன் அளவளாவிப் பிரியாது தங்கி அவளை ஆற்றுவித்தான். அத்தகைய காதலுடைய தலைவன் இப்பொழுது தன்னுடன் தங்காமல் பிரிந்ததை நினைத்துக் கலங்கிய தலைவி தன்னுடைய நெஞ்சு மிகவும் வருந்துவதாகத் தோழியிடம் மீண்டும் கூறுகிறாள். இக்கருத்தினை,

**நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே**
**இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி**
**அமைதற் கமைந்தநங் காதலர்**
**அமைவில ராகுத னோமென் னெஞ்சே (குறுந்., 4)**

என்னும் பாடல் புலப்படுத்துகின்றது. தலைவியின் கண்கள் வெம்மைக் கண்ணீர் வடிப்பது குறித்து உரையாசிரியர் உ.வே.சா., "**பிரிவாற்றாமையால் வரும் கண்ணீராதலின் வெம்மையை யுடையதாயிற்று"** (குறுந்., ப. 15) என்று விளக்குவர். இப்பாடலில் 'நோமென் னெஞ்சே' என்னும் தொடர் மூன்று முறை அடுக்கி வந்துள்ளது.இதுகுறித்து உ.வே.சா., "**மூன்று முறை அடுக்கியது ஆற்றாமை மிகுதி பற்றி"** (குறுந்., ப. 15) என்பர்.

**கண்கள் துயிலாத நிலை**

நெய்தல் நிலக் கடற்கரை அருகில் புன்னை மரம் வளர்ந்து காட்சியளிக்கிறது. இனிய நிழலையுடைய அம்மரத்தில் குருகு என்னும் பறவை மீன் உண்டு துணையின்றித் தங்கித் துயில் கொள்கிறது. இத்தகைய நெய்தல் நிலத்திற்கு உரிய தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் காதலன்பு கொள்கின்றனர்.ஒரு தருணத்தில் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கிறான்.அதனால், தலைவி பிரிவாற்றாது துயருறுகிறாள். பல இதழ்களையுடைய தாமரை மலரைப் போன்ற மையுண்ட தலைவியின் கண்கள் தலைவனின் வரவை எதிர்நோக்கித் துயிலாமல் வருந்துகின்றன. அங்ஙனம் துயிலாமல் வருந்தும் தலைவி, "**காம நோய் என்பது அத்தகையதோ?"** என்று தோழியிடம் பிரிவாற்றாமல் மனம் கலங்கி வினவுகிறாள்.

**அதுகொ றோழி காம நோயே**
**வதிகுரு குறங்கு மின்னிழற் புன்னை**
**உடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்**
**மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்**
**பல்லித ழுண்கண் பாடொல் லாவே** (குறுந்., 5)

என்னும் பாடல் மேற்கருத்தைப் புலப்படுத்தி நிற்கிறது. இப்பாடலின் உரையாசிரியர் வி.நாகராசன், "**தன் நாட்டில் குருகு இனிது உறங்குவதற்குக் காரணமாகிய தலைவன்,**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**தலைவியின் உறங்காமைக்குக் காரணன் ஆயினன் என்ற குறிப்பு, இப்பாடலில் அமைந்துள்ளது"** (குறுந். ப. 20) என்று குறிப்பிடுவர். இவர்தம் கருத்து மனங்கொள்ளத்தக்கது.

**உயிர் துறக்கும் நிலை**

நீரில் வாழும் மகன்றில் பறவைகள் ஆணும் பெண்ணுமாகப் பிரிவின்றி இணைந்து இன்புற்று வாழும் இயல்புடையன. அங்ஙனம் அவை சேர்ந்து வாழ்ந்து வரும் நிலையில் தமக்கிடையே ஒரு பூ வந்து ஒன்றையொன்று காண முடியாமல் மறைப்பதாக இருந்தால்கூடப் பல ஆண்டுகள் கழிந்தாற்போலத் துயருற்று உயிரைத் துறக்கும். அதுபோலத் தலைவன், தலைவி என்னும் இருவராக வாழ்ந்துவரும் இவ்வுலகத்தில் தலைவனது பிரிவினால் ஒருவராகத் தனித்து வாழ்வது தலைவிக்குப் பெருந்துன்பத்தைத் தர வல்லது. அப்பிரிவுத் துன்பத்திலிருந்து நீங்கித் தப்புவதற்குப் புணர்ச்சியால் ஒன்றிணைந்த மேற்குறித்த மகன்றில் பறவைகள் பிரிவு நேர்ந்த உடன் இறந்துபட்டனபோலத் தலைவன் பிரிந்த உடன் நீங்காத காம உணர்வோடு தனது உயிரும் பிரிவதாக என்று விருப்புடன் தலைவி தோழியிடம் கூறுகிறாள். இக்கருத்தினை, "**பூவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன" (**குறுந்., 57) எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல் வலியுறுத்தும். இப்பாடலில் பயின்று வரும் 'உடனுயிர் போகுக தில்ல...' என்னும் பாடலடிக்கு உரை வரைந்த உ.வே.சா., **"ஒருங்கே எம் உயிர் போவனவாகுக ; இஃது எனது விருப்பம்"** (குறுந்., ப. 137) எனத் தலைவி தோழியிடம் கூறியதாகக் குறிப்பர். உரையாசிரியர் வி.நாகராசன், **"காதலர்ப் பிரிந்தவுடன் என் உயிரும் உடன் நீங்குவதாகுக. அதுவே என் விருப்பமாகும்"** (குறுந். ப. 148) என்பர். உரையாசிரியர் பொ.வே. சோமசுந்தரனார், **"பிரிவு நேர்ந்த அப்பொழுதே இவ்வுயிரும் இவ்வுடலை விட்டுப் போவதாக; இஃது எனக்கு விருப்பம்"** (குறுந். ப. 117) என்று குறிப்பிடுவர். இம்மூவருள் வி.நாகராசனும் பொ.வே.சோமசுந்தரனாரும் ஒன்றுபடுவர். உ.வே.சா. வேறுபடுவர். இவர் தம் உரைகள் குறித்து எதிர்கால ஆய்வர் ஆய்க.

**பருவம் கண்டு இரங்கும் நிலை**

கார்ப்பருவ மாலைக்காலத்தில் மழையையுடைய கரிய மேகங்கள் மலைப்பகுதிக்கண் தோன்றுகின்றன.அவை அம்மலைப்பகுதியில் இனிய ஓசையுடன் இடி இடித்து முழங்குகின்றன. அதன் விளைவாக மழை பெய்கின்றது. அம்மழையானது முன்பு மழை பெய்த குன்றத்தின்கண் பரவிக் கிடந்த மணம் கமழும் மலர்களையும் அப்பொழுது உதிர்ந்த மணம் வீசும் புதிய மலர்களையும் சுமந்து வந்து அருவியாகப் பாய்கிறது. இத்தகைய கார்ப்பருவம் தொடங்குவதற்கு முன்னர் மீண்டு வருவதாகப் பாதுகாப்பான மொழிகளைக் கூறித் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவர் இன்னும் வந்திலர். அவர் உறுதியாகத் தன்னை மறந்துள்ளார்.ஆயின், தலைவி அவரை மறவாமல் இருப்பதாகப் பிரிவுத்துயருடன் தோழியிடம் கூறுகிறாள். இதனை,

**... வாரார் தோழி**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**மறந்தோர் மன்ற மறவா நாமே (குறுந்., 200: 3-4)**

என வரும் பாடலடிகள் இடம்பெறும் பாடல் புலப்படுத்தும்.

கார்ப்பருவம் தொடங்குவதற்கு முன்னர் மீண்டு வருவதாகத் தலைவியிடம் கூறிப் பிரிந்த தலைவர் கார்ப்பருவத்தில் இடி இடித்து மழை பெய்து கொண்டிருக்கும் நிலையிலும் வந்திலர். அதனால், பெரிதும் ஆற்றாமைத்துயர் அடைந்த தலைவி இரங்கி வருந்தும் நிலைக்கு உள்ளானாள்.தலைவர் குறித்த காலத்தில் வாராது தன்னை மறந்தாலும் தான் அவரை மறவாது நினைவு கூர்வதாகக் கூறுகிறாள்.அவளது கூற்றிலிருந்து அவள் தலைவர்மீது கொண்டிருக்கும் பேரன்பு புலப்படுகிறது. காதல் வாழ்வு இனிமையானது. பிரிவு துயரம் மிக்கது ; இரங்கத்தக்கது. இப்பிரிவில்தான் அன்பு மிகும். **பிரிவே அன்பின் மிகுதியை உணர்த்த வல்லது.இன்பச்சுவைக் காட்சிகளைவிட அவலச்சுவை மனதில் சிறந்ததொரு இடம்பெற்று விடுதற்குரியதாகின்றது.** (குறுந்., ப. 38) என்பர் ப.ச.ஏசுதாசன். இவர்தம் கூற்று இங்குப் பொருத்தமுடையதாக அமைந்துள்ளது.

**தலைவனது பிரிவுக்கான காரணம்**

பண்டைய மாந்தர்தம் அக வாழ்வில் ஓதற்பிரிவு, பகைவயிற்பிரிவு, தூதுவயிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு, பரத்தையிற்பிரிவு என்றினைய பல்வகைப் பிரிவுகள் நிகழ்ந்தன என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. (தொல். பொருள். நூ. எண். 27, 35, 185) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நான்கு பாடல்களும் தலைவன் பிரிந்ததனால் தலைவிக்கு ஏற்பட்ட பிரிவாற்றாமையையும் அதன் விளைவாக அவள் தனது இரங்கல் உணர்வுகளைத் தோழியிடம் வெளிப்படுத்துவதனையும் எடுத்துரைக்கின்றன. ஆயின், தலைவன் தலைவியைப் பிரிந்ததற்கான காரணம் குறித்துப் பாடல்களில் கூறப்படவில்லை. எனினும், குறுந்தொகை உரையாசிரியர்களின் விளக்கங்களிலிருந்து களவில் தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்தான் என்பதனை அறிய முடிகிறது. மேற்குறித்த பாடல்களுள் உரையாசிரியர் வி. நாகராசன் முதல் பாடலின் கீழ்ப்பகுதியிலும் (குறுந்., ப.17), உரையாசிரியர் பொ.வே. சோமசுந்தரனார் முதல் இரண்டு பாடல்களின் மேற்பகுதியிலும் (குறுந். பக்., 48, 49) தலைவனது பிரிவுக்கான காரணம் குறித்துக் கூறுவர். எஞ்சிய பாடல்களின் உரை விளக்கங்களில் மேற்குறிப்பிட்ட உரையாசிரியர்களும் நான்கு பாடல்களுக்குமுரிய உரை விளக்கங்களில் உரையாசிரியர் உ.வே.சா.வும் தலைவனது பிரிவுக்கான காரணம் குறித்துக் கூறினாரிலர். இது குறித்து எதிர்கால ஆய்வர் ஆய்க.

**முடிவுரை**

குறுந்தொகை நெய்தல் தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகள் என்னும் தலைப்பில் நிகழ்த்தப்பட்ட இவ்வாய்வின் மூலம் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன. இயற்கைப் புணர்ச்சியால் ஒன்றுபட்ட மனத்தினராகத் தலைவனும் தலைவியும் வாழ்ந்த சூழலில் தலைவனது பிரிவு தலைவிக்குப் பிரிவாற்றாமையால் துயருற்று இரங்கும் மன

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

உணர்வைத் தோற்றுவித்தது. அதன் விளைவாகத் தலைவி நெஞ்சு வருந்தி வெம்மைக் கண்ணீர் சிந்துதல், தலைவனின் வருகையை எதிர்நோக்கிக் கண்கள் துயிலாமல் இருத்தல், மகன்றில் பறவையைப் போலத்தலைவி உயிர் துறக்கும் நிலைக்குச் செல்லுதல், கார்காலம் தொடங்குவதற்கு முன்னர் மீண்டு வருவதாகக் கூறிச் சென்ற தலைவன் கார்காலம் வந்த பின்னரும் வாராமையால் தலைவி அப்பருவம் கண்டு இரங்கும் நிலைக்கு உள்ளாகி, தலைவன் தன்னை மறந்தாலும் தான் தலைவனை மறவாத நிலையில் இருப்பதாகக் கூறுதல் ஆகியன தலைவியின் இரங்கல் உணர்வு வெளிப்பாடுகளாக அறிய முடிந்தன. இவ்விரங்கல் உணர்வு வெளிப்பாடுகள் தலைவி தலைவன்மீது கொண்ட உறுதியான தூய காதலையும் தலைவனோடு மேன்மையான இல்லற வாழ்வு வாழ்ந்து பொலிவடைய வேண்டும் என்று எதிர்பார்ப்பதையும் புலப்படுத்துகின்றன எனலாம். மேலும், தலைவனது பிரிவுக்கான காரணம் குறித்துப் பாடல்கள் கூறாவிடினும் உரையாசிரியர்களின் விளக்கங்கள் மூலம் தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்தான் என்பதனை அறிய முடிகிறது.

**குறிப்புகள்**

[1] இளம்பூரணர், (உரை.). *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை -1, 1982.
[2] ஏசுதாசன், ப.ச. *திருக்குறளில் களவும் கற்பும்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை-8, 2015.
[3] சாமிநாதையரவர்கள், உ.வே., (உரை.). *குறுந்தொகை.* கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1947.
[4] சோமசுந்தரனார், பொ.வே., (உரை.). *குறுந்தொகை.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை-18, 2007.
[5] நாகராசன், வி., (உரை.), *குறுந்தொகை* (மூலமும் உரையும்), புத்தகம் – 1, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை – 600 098, 2014.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [https://creativecommons. org/licenses/by/4. 0/](https://creativecommons.org/licenses/by/4.0/) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.